بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

பொருத்தமான நற்செயல்கள் செய்வதும் மற்றும் இறைவணக்கத்தில் இன்பமும் ஆர்வமும் ஏற்படுவதும் நம் தரப்பிலிருந்து ஏற்படக்கூடிய ஒன்றல்ல. இது இறைவனது அருள் மற்றும் அவன் வழங்குகின்ற நல்வாய்ப்பு ஆகியவற்றின் மூலமாகத்தான் கிடைக்கும். இதற்காக மனிதன் பயப்படாமல் இருக்க வேண்டியது அவசியமானதாகும். மேலும் இறைவனிடம் இதற்காக அவனது அருளும் அவன் வழங்கும் நல்வாய்ப்பும் கிடைக்க துஆ செய்து கொண்டிருக்க வேண்டும். இதற்காக மனிதன் இஸ்திஃபார் செய்வது அவசியமானதாகும். ஷய்த்தானின் தாக்குதல்களிலிருந்து தப்பிப்பதற்கு இஸ்திஃபார் செய்வது மிகவும் அவசியமானதாகும்.

*அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர் ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்*

*(அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்- அல்லாஹ் தனது வல்லமைமிக்க உதவியினால் அவர்களை வலுப்படுத்துவானாக)*

*அவர்கள் ஃபஸல் பள்ளிவாயிலில் 25.9.2015 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்*

தஷஹ்ஹுத், தஅவ்வுத் மற்றும் சூரா ஃபாத்திஹா ஓதிய பிறகு ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:

இறைவணக்கத்தில் ஆர்வம் எவ்வாறு ஏற்படும் என்று சிலர் இவ்வாறு கேள்வி கேட்கின்றனர். நாங்கள் முயற்சி செய்தாலும் அந்த நிலை எங்களிடம் உருவாகாமல் இருக்கின்றது என்று அவர்கள் கூறுகின்றனர். அவர்கள் நினைவில் கொள்ள வேண்டும். அடியானின் பணி தொடர்ந்து இதற்காக முயற்சி செய்து கொண்டிருப்பதாகும். எது கிடைக்குமோ அது இறைவனிடமிருந்து தான் கிடைக்கும் என்ற நம்பிக்கையில் அவர் நிலைத்திருக்க வேண்டும். அப்போது தான் அவரை இறைவனுக்கு அருகில் கொண்டு செல்கின்ற அந்த நிலை உருவாக முடியும். பிறகு அது இறைவணக்கத்தில் உள்ள ஆர்வத்தை அதிகமாக்குகிறது.

ஒரு முறை ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களிடம் ஒருவர் இறைவணக்கத்தில் ஆர்வம் எவ்வாறு ஏற்படும்? என்று கேட்டார். அதற்கு அவர்கள், பொருத்தமான நற்செயல்கள் செய்வதும் மற்றும் இறைவணக்கத்தில் இன்பமும் ஆர்வமும் ஏற்படுவதும் நம் தரப்பிலிருந்து ஏற்படக்கூடிய ஒன்றல்ல. மனிதன் இது தானாகவே ஏற்பட்டுவிட வேண்டும் என்று கூறினாலோ அல்லது எனது முயற்சியினால் இதை நான் உருவாக்கி விடுவேன் என்று கூறினால் அவ்வாறு செய்ய முடியாது. இது இறைவனது அருள் மற்றும் அவன் வழங்குகின்ற நல்வாய்ப்பு ஆகியவற்றின் மூலமாகத்தான் கிடைக்கும். இதற்காக மனிதன் பயப்படாமல் இருக்க வேண்டியது அவசியமானதாகும். மேலும் இறைவனிடம் இதற்காக அவனது அருளும் அவன் வழங்கும் நல்வாய்ப்பும் கிடைக்க துஆ செய்து கொண்டிருக்க வேண்டும். சோர்வடைந்து உட்கார்ந்து விடக்கூடாது. மாறாக, நிரந்தரமாக தொடர்ந்து துஆ செய்து வர வேண்டும். மேலும் இந்த துஆக்களை செய்வதில் சோர்வடைந்து விடக்கூடாது.

அன்னார் கூறினார்கள்:

இந்த துஆக்களை செய்வதில் சோர்வடைந்துவிடக் கூடாது. மனிதன் இவ்வாறு தொடர்ந்து மணப்பாங்குடன் துஆக்கள் செய்வதில் ஈடுபட்டு வந்தால் இறுதியில் இறைவன் எந்த விஷயத்திற்காக அந்த மனிதனின் உள்ளத்தில் துடிப்பும் நிம்மதியின்மையும் இருந்ததோ அந்த விஷயத்தை உருவாக்கி விடுவான். அதாவது இறைவனை வணங்குவதில் ஒரு இன்பமும், ஆர்வமும், இனிமையும் உருவாக ஆரம்பித்துவிடும். இறைவணக்கத்திலுள்ள இனிமையும், சுவையும் அவருக்கு கிடைக்க ஆரம்பித்துவிடும்.

அன்னார் கூறினார்கள்:

ஆனால் ஒரு நபர் இதற்காக முயற்சி செய்யாமல் இருந்தால், உழைக்காமல் இருந்தால் மேலும் எவராவது ஓதி ஊதுவதன் மூலம் நான் அல்லாஹ்வுக்கு அருகில் சென்று விட முடியும் என்று கருதினால் அல்லது எவருக்கு அருகிலாவது நான் சென்றால் அவர் ஊதுவதன் மூலம் இறைவணக்கம் செய்யக்கூடியவராக அவர் என்னை ஆக்கிவிடுவார் என்று கருதினால் இது இறைவனின் நடைமுறையல்ல. இந்த வழிமுறை மூலம் எவர் அல்லாஹ்வை சோதிக்கின்றாரோ அவர் இறைவனை பரிகாசம் செய்கின்றார். இதன் காரணமாக அவர் அழிந்து விடுகின்றார். இறைவனை விட்டும் விலகிச் சென்று விடுகின்றார்.

அன்னார் கூறினார்கள்:

நன்றாக நினைவில் கொள்ளுங்கள். உள்ளங்கள் அல்லாஹ்வின் கைகளில் இருக்கின்றது. அவனது அருள் இல்லையென்றால் மறுநாளே அவர் கிறித்தவராக ஆகிவிடலாம். இஸ்லாத்தை விட்டு விலகி விடலாம். அல்லது வேறு ஏதாவதொரு மார்க்கமற்ற நிலைமையில் மூழ்கி விடலாம். மார்க்கத்தை விட்டு விலகி தொலைவில் சென்று விடலாம்.

எனவே, ஒவ்வொரு சமயமும் அவனது அருளை பெறுவதற்காக துஆ செய்து கொண்டிருக்க வேண்டும். அவனிடம் உதவி கேட்க வேண்டும். அவன் உங்களை நேரான வழியில் நிலைத்து நிற்கும்படி செய்வதற்காக அவனிடம் உதவி கேட்க வேண்டும். எந்த நபர் இறைவனது தேவை எனக்கு இல்லை என்று கூறி அவனை விட்டு விலகி சென்று விடுகின்றாரோ அவர் ஷய்த்தானாகி விடுகின்றார். அந்த நபர் அல்லாஹ்வை கைவிட்டுவிட்டால், அவனை மறந்து விட்டால் பிறகு ஷய்த்தான் அவர் மீது தாக்குதல் நடத்துகின்றான். அதனால் அவர் ஷய்த்தானாகி விடுகின்றார்.

அன்னார் கூறினார்கள்:

இதற்காக மனிதன் இஸ்திஃபார் செய்வது அவசியமானதாகும். அதன் மூலம் மனிதனை அழிக்கக்கூடிய அந்த விஷமும் உணர்வும் உருவாகாமல் இருக்க வேண்டும். இஸ்திஃபார் தான் இதற்கான சிகிச்சையாகும். ஷய்த்தானுக்கு அருகில் கொண்டு சென்று மனிதனை அழிக்கின்ற அந்த விஷயத்திலிருந்து தப்பித்துக் கொள்ளுங்கள்.

எனவே, நிரந்தரமாக இவ்வாறு செயல்படுவது நிபந்தனையாகும். இறைவனைத் தவிர வேறு எவரும் இல்லை என்ற நம்பிக்கை இருக்க வேண்டும். எல்லா வழிகளையும் அடைத்து விட்டு இறைவன் பக்கம் குனியும் போது அப்போது தான் இறைவணக்கத்தில் ஆர்வத்தை ஏற்படுத்தக்கூடிய அந்த நிலைமை உருவாகும். நிரந்தரமாக இறைவன் பக்கம் குனிய வேண்டியது வரும். நிரந்தரமாக அவனிடம் உதவி கேட்க வேண்டியது வரும். ஷய்த்தான் எல்லா சமயங்களிலும் தாக்குதல் நடத்த தயாராக இருப்பதனால் தான் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இந்த இன்பத்தையும், ஆர்வத்தையும் உருவாக்குவதற்காக இஸ்திஃபார் செய்ய வேண்டியது அவசியமானதாகும். ஷய்த்தானின் தாக்குதல்களிலிருந்து தப்பிப்பதற்கு இஸ்திஃபார் செய்வது மிகவும் அவசியமானதாகும் என்று கூறியுள்ளார்கள்.

இஸ்திஃபார் செய்து மனிதன் ஷய்த்தானை தன்னைவிட்டும் துரத்தி விடும் போது பிறகு அல்லாஹ்வின் அடைக்கலத்தில் வருவதற்காக மனிதன் துடித்தவாறு துஆவும் செய்வான். இஸ்திஃபார் மூலமாக இந்த துடிப்பும் உருவாகும். மேலும் முன்னேறுவதற்கான வழிகளை எதிர்காலத்தில் தேட வேண்டும் என்பதற்காக அவர் துஆவும் செய்வார். அத்தகைய நிலைமை மனிதனிடம் ஏற்பட்டுவிட்டால் பிறகு இறைவனும் அவர் மீது அருள் செய்கின்றான்.

அல்லாஹ் நாம் சரியான இறையடியாராக ஆவதற்கும் நன்மைகளை செய்வதற்குமுள்ள நல்வாய்ப்பை நமக்கு வழங்குவானாக. நிரந்தரமாக அவற்றில் நிலைத்திருப்பதற்கான நல்வாய்ப்பையும் வழங்குவானாக. ஆமீன்.

Friday Sermon delivered by Hadrath Khaleefathul Masih Alkhamis (atba)
at Masjid Fazal, London – on 25.9.2015
Tamil Translation : Moulavi. M. Rafeeq Ahmed Sb
Published By Nazarath Nashr-O-Isha’ath,Sadr Anjuman Ahmadiyya - Qadian, 143516